தொழிலாளர்களுக்கான நடவடிக்கை நிலையம்

# வேலைத்தலங்களில் உங்களது புதிய உரிமைகள்

ஒன்ராறியோ மாகாண தொழிலாளர்கள் தமது ஒருமித்த போராட்டத்தின் பின் $15 அடிப்படைச் சம்பளம், சம்பளத்துடனான சுகயீன லீவு, அவசர தேவையின் நிமித்தம் அனைவருக்கும் லீவு, சமமான வேலைக்குச் சமமான சம்பளம், வேலைக்குரிய நியாயமான கால அட்டவணை என்பவற்றை தற்போது பெற்றுக் கொண்டுள்ளார்கள். இந்தப் புதிய உரிமைகள் அடுத்த வருடம் கட்டம் கட்டமாக அமுல்படுத்தப்பட இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் எவ்வாறு நடைமுறைக்கு வர இருக்கின்றது என்பதனை கீழே தரப்பட்டுள்ள தகவல்களிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

**வேலைத்தலத்தில் உங்களது சில புதிய உரிமைகள் கீழே தரப்பட்டுள்ளன.**

## ஜனவரி 1, 2018இல் பின்வரும் புதிய உரிமைகள் அமுலுக்கு வருகின்றன:

- பொதுவான அடிப்படைச்சம்பளம் மணித்தியாலத்திற்கு $14
  - 18 வயதிற்குக் குறைந்த மாணவர்களுக்கான அடிப்படைச்சம்பளம் $13.15
  - உணவகங்களில் மதுபானம் பரிமாறுபவர்களுக்கான அடிப்படைச்சம்பளம் $12.20
- அனைத்து தொழிலாளர்களுக்குமான தனிப்பட்ட அவசர தேவையின் நிமித்தம் லீவு 10 நாட்கள். இவற்றில் இரண்டு (02) நாட்கள் சம்பளத்துடன் கூடியவை. வைத்தியரின் கடிதம் இங்கு தேவைப்படாது.
- ஒரே நிறுவனத்தில் ஐந்து (05) வருடங்களுக்கு மேல் சேவையாற்றி இருந்தால் மூன்று (03) கிழமைகளுக்கான விடுமுறைக் கொடுப்பனவினைப் பெறலாம்.
- குடும்ப அல்லது பாலியல் வன்முறை காரணமாக ஒவ்வொன்றாக 10 நாட்களை லீவாகப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு தொழிலாளி அல்லது அவரது பிள்ளை குடும்ப அல்லது பாலியல் வன்முறைக்குப் பயமுறுத்தப்படுமிடத்து இந்த லீவு 15 கிழமைகள் வரை நீடிக்கப்படலாம். இவற்றில் ஒவ்வொரு வருடமும் முதல் ஐந்து (05) நாட்களை சம்பளத்துடன் கூடியதாகப் பெற்றுக் கொள்ளலாம்.
- தற்காலிக உதவி ஏஜென்சிகள் ஒரு நீண்டகால ஒப்பந்தத்தினை இடையில் முடிவுக்குக் கொண்டு வருமிடத்து, ஒரு கிழமைக்கு முன்னரான அறிவித்தல் அல்லது அதற்குச் சமமான சம்பளம் தொழிலாளர்களுக்கு வழங்குதல் வேண்டும்.
- வீட்டுப் பணியாளர்கள், கட்டிட சேவை ஊழியர்கள், தற்காலிய ஏஜென்சி தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஒரு தொழிற்சங்கத்தினைத் தாபிப்பது இலகுவாக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மை ஊழியர்கள் தொழிற்சங்க அட்டையில் ஒப்பமிடுமிடத்து தொழில்தருநர் அந்த தொழிற்சங்கத்தினை அங்கீகரித்தல் வேண்டும் (பின்னரான வாக்கெடுப்பு அங்கு தேவைப்படாது).
- தொழிலாளர்களை சுயாதீன ஒப்பந்தக்காரர்கள்" என தவறாக வகைப்படுத்துவது சட்டத்திற்கு முரணானது. இங்கு ஒரு நபர் தொழிலாளி அல்ல என நிரூபிப்பது தொழில்தருநர்களின் பொறுப்பாகும்.
- தொழில்முறை ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் (OHSA), தொழில்தருநர்கள் தொழிலாளர்களை உயர்குதி பாதணிகளை அவை தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தாலன்றி, அவ்வாறான உயர்குதி பாதணிகளை அணியுமாறு வலியுறுத்த இயலாது.

**வருகின்ற வசந்த காலத்தில்.**

ஏப்பிரல் 1, 2018 இல் பின்வரும் புதிய உரிமைகள் அமுலுக்கு வருகின்றன:

- நிரந்தர ஊழியர்களினால் ஆற்றப்படும் ஒரே மாதிரியான வேலையினை, தற்காலிக, பகுதிநேர, ஒப்பந்த ஊழியர்கள் ஆற்றும் போது அவர்களுக்கு சமமான வேலைக்குரிய சமமான சம்பளம் வழங்கப்படுதல் வேண்டும்.
- நிரந்தர ஊழியல்களினால் ஆற்றப்படும் ஒரே மாதிரியான வேலையினை தற்காலிக ஏஜென்சி ஊழியர்கள் ஆற்றும் போது அவர்களுக்குச் சமமான வேலைக்குரிய சமான சம்பளம் வழங்கப்படுதல் வேண்டும்.

**வருகின்ற அடுத்த வருடத்தில் - அடிப்படைச்சம்பளம் 15 டொலரும். இன்னும் பலவும்**

ஜனவரி 1, 2019இல் பின்வரும் புதிய உரிமைகள் அமுலுக்கு வருகின்றன:

- பொதுவான அடிப்படைச்சம்பளம் மணித்தியாலத்திற்கு $15
  - 18 வயதிற்குக் குறைந்த மாணவர்களுக்கான அடிப்படைச்சம்பளம் $14.10
  - உணவகங்களில் மதுபானம் பரிமாறுபவர்களுக்கான அடிப்படைச் சம்பளம் $13.05
- வேலைக்குரிய நியாயமான கால அட்டவளை
  - தொழில்தருநரினால் நான்கு (04) நாட்களுக்குக் குறைவான (96 மணித்தியாலங்கள்) கால அறிவித்தலுடன் வேலைக்கு அழைக்கப்படுவீர்களாயின், அந்த வேலையினை மறுப்பதற்கு தொழிலாளர்களுக்கு வேலைப்பாதுகாப்புடனான உரிமை (job protected right) உண்டு.
  - மூன்று (03) மாதங்களுக்கு ஒரு நிறுவனத்தில் வேலையாற்றிய பின் வேலைக்குரிய கால அட்டவவையினை அல்லது வேலை நிலையத்தினை (schedule or location) மாற்றித்தருமாறு கேட்பதற்கு வேலைப்பாதுகாப்புடனான உரிமை உண்டு.
  - ஒரு வேலை (shift) இரண்டு (02) நாட்களுக்குக் குறைவான (48 மணித்தியாலங்கள்) அறிவித்தலில் இரத்துச் செய்யப்படுமாயின், மூன்று (03) மணித்தியாலங்களுக்குரிய வேதனம் வழங்கப்படுதல் வேண்டும்.
  - வேலைக்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள ஊழியர்கள் (on-call workers) அவர்கள் வேலைக்கு அழைக்கப்படாதவிடத்து அல்லது மூன்று (03) மணித்தியாலங்களுக்குக் குறைவான வேலைக்கு அமர்த்தப்படுமிடத்து, மூன்று (03) மணித்தியாலங்களுக்குரிய வேதனம் வழங்கப்படல் வேண்டும்.